அமுதசுரபி

நவம்பர்-2013

விலை: ₹120/-

தீபாவளி
சிறப்பிதழ்

அமுதசுரபி 66ம் ஆண்டு
இதழ் அல்ல, இயக்கம்...

நா பார்த்தசாரதி

ஏ.என். பார்த்தசாரதி

இந்தத் தலைப்பில் நான் ஒருவன்தான் கட்டுரை எழுத முடியும். அது என்ன தனித்தன்மை? கட்டுரையின் உள்ளே ஓரிடத்தில் அதைச் சொல்வேன்.

என் எழுத்து வாழ்க்கையின் நாற்றங்கால் பருவத்தில் மதுரையில் இருந்தபோது பார்த்தசாரதியும் அங்கிருந்தார். தனது பள்ளிப் பருவம் முடித்து அவர் தமிழ் வித்வான் தேர்வும் முடித்துத் தமிழாசிரியராக மதுரையில் பணி தொடங்கியிருந்த காலம் அது. பள்ளிப் பருவத்தில் கட்டுக்குடுமியுடன் இருந்தவர் கிராப்புத் தலைக்காரராக மாறிவிட்டிருந்தார்.

மதுரை டவுன்ஹால் ரோடிலும் மேலமாசி வீதியிலும் நாங்கள் இணைபோட்டுக்கொண்டு அளவளாவியபடி நடந்து சென்றதெல்லாம் நினைவுக்கு வருகிறது. பிரசண்ட விகடனில் நான் கவிதைகளும் சிறுகதைகளும் எழுதிக்கொண்டிருக்க, அதே அலுவலகத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஆனந்த போதினியில் அவர் சங்கத் தமிழை நடைமுறைத் தமிழாகத் தந்துகொண்டிருந்தார். தமிழ் வித்துவான் படிப்பு அவருக்கு அந்த வழியைக் காட்டியது. நான் தடம் பதிக்க முடியாத பாதை அது. பின்னரான காலத்தில் அவர் குறைவான கவிதைகளும் நிறையச் சிறுகதைகளும் எழுதினார்.

காலம் செல்லச் செல்ல **அமுதசுரபி, காவேரி, சுதேசமித்திரன், உமா, இலங்கை வீரகேசரி** ஆகிய பத்திரிகைகளில் எங்கள் எழுத்துகள் பிரசுரமாயின. எங்கள் படைப்புகளைத் தபாலில் அனுப்புவோம். தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்தந்தப் பத்திரிகைகளில் பிரசுரமாகும். பத்திரிகை ஆசிரியர்களுடன் நேரடித் தொடர்பு என்பதெல்லாம் எங்களுக்குத் தெரிந்திராத விஷயம்.

அந்தக் காலப்போதில் கல்கியில் மாவட்ட எல்லையிட்ட சிறுகதைப் போட்டிகள் நடந்தன. மதுரை மாவட்டத்துக்கான சிறுகதைப் போட்டியில் பார்த்தசாரதியின் 'வலம்புரிச் சங்கு' சிறுகதை தேர்ந்தெடுக்கப்பட்டுப் பிரசுரமாயிற்று. புதிய வழித்தடத்தில் அவர் வேகமாகச் செல்வதற்கு அதுதான் திறவுகோலாக அமைந்தது. பணியாற்றிக் கொண்டிருந்த பள்ளி ஆசிரியர் வேலையை விட்டுவிட்டுக் கல்கியில் ஆசிரியர் குழுவில் அவர் சேரும் அளவுக்குப் பின்புலமாக அவருடைய பல சிறுகதைகள் அடுத்தடுத்து வெளிவந்து, தொடர்கதைகளும் வெளிவரத் தொடங்கின. மதுரை எழுத்தாளர்களுக்குக் கிடைத்த அங்கீகாரமாகவும் மரியாதையாகவும் அதை நாங்கள் எடுத்துக்கொண்டோம்.



மு.வரதராசனார்

அப்போதெல்லாம் எங்களுக்கு ரோல் மாடலாக இருந்தவர் **அகிலன்.** அந்தத் தமிழ் நடைதான் எங்களை வழிநடத்திற்று. பார்த்தசாரதி முறையாகப் பண்டிதத் தமிழ் கற்றிருந்ததனால் அந்த வாசனையும் அதில் வீசியது. நான் பி.எஸ்சி. (வேதியியல்) முடித்திருந்தவன் என்ற நிலையில் ஒரு சமன்பாடு எழுதி அவரிடம் காட்டினேன். "நீங்க கெமிஸ்ட்ரி படிச்சதுக்கு நல்ல பலன் இருக்கு!" என்று சொல்லிக்கொண்டே ஒரு நட்புச் சிரிப்பு சிரித்தார். அகிலன் + மு.வ. = நா.பா. என்பதுதான் அந்தச் சமன்பாடு. அப்போது டாக்டர் மு.வரதராசனார் பண்டிதத் தமிழை நடைமுறைத் தமிழ் இலக்கியத்தில் காண்டேகர் பாணியில் (கா.ஸ்ரீ.ஸ்ரீ. மொழிபெயர்ப்புக்கு நன்றி கூற வேண்டிய முக்கியமான விஷயம் இது) முத்திரை பதித்துக் கொண்டிருந்தார்.

காலம், சூழல் எல்லாம் எப்படி எப்படியோ மாறி பார்த்தசாரதி கல்கியிலிருந்து வெளியேறி தனிநிலை எழுத்தாளராக மாறினார். அப்போது நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.எஸ்.சி. (வேதியியல்) படித்துக் கொண்டிருந்தேன். சற்றும் எதிர்பாராதபடி என்னுடைய அந்தப் பல்கலைக்கழக முகவரிக்கு பார்த்தசாரதியிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. கல்கியிலிருந்து விலகிவிட்டதையும், தனியே ஒரு மாத இதழைத் தொடங்க இருப்பதையும் குறிப்பிட்டு எழுதியிருந்தார்.

பத்திரிகையின் பெயராக நான்கைந்து பெயர்களைக் குறிப்பிட்டு எழுதியிருந்தார். அந்த நான்கைந்து பெயர்களில் 'தீபம்' நன்றாக

Awesome Bril helps you Chill !
Bril®
Makes learning fun™
INDUSTRIAL RESEARCH CORPORATION
19, 12th Main Road, Malleswaram West, Bangalore-560 055. Tel : +91 80 23400394
Email: brilinfo@brilindia.com
www.bril.in

இருக்கிறதென்று கடிதம் எழுதினேன். கல்கியைப் போல அதுவும் மூன்றெழுத்து ஓசையுடையது என்ற கருத்தைக் குறிப்பிட்டு என் அபிப்பிராயத்தை எழுதினேன். வேறு சிலரும் அந்தப் பெயரைக் குறிப்பிட்டதாக அவர் தகவல் தெரிவித்தார். அது '**தீபம்**' பிறந்த கதை.

தீபத்தில் என்னுடைய கவிதைகள் வெளிவந்துகொண்டிருந்த நிலையில் **அமுதசுரபி**யில் 'வாழ்க்கையில் ஒரு கிரண்மயி' என்ற கட்டுரை ஒன்றை எழுதியிருந்தேன். அது சரத்சந்திரர் வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் அனுபவத்தை மையமாகக் கொண்ட கட்டுரை. "அது மாதிரியான கட்டுரைகளை தீபத்தில் எழுதலாமே" என்று பார்த்தசாரதி கடிதம் எழுதவே, அந்த உற்சாகத் தூண்டுதலில் தீபத்தில் 'சரத்சந்திரர் வாழ்க்கை' என்ற கட்டுரைத் தொடரை எழுதினேன். தெலுங்குப் பத்திரிகைகளிலிருந்து கிடைத்த குறிப்புகளின் அடிப்படையில் தொடரை எழுதியிருந்தேன். தெலுங்கைக் கற்றிருந்த நிலையில் அந்த மொழிக் கவிதைகளையும் சிறுகதைகளையும் நிறைய மொழிபெயர்த்தேன். அவை பல்வேறு பத்திரிகைகளில் பிரசுரமாயின.

அந்தச் சூழலில் நான் தீபம் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றிருந்தபோது, "நீங்க இனிமே கவிதை, சிறுகதையெல்லாம் எழுதவேண்டாம். அதை எங்களை மாதிரியானவங்க பார்த்துக்கிடுறோம். அதுக்கு நிறையப் பேர் இருக்கிறாங்க. நீங்க மொழிபெயர்ப்பிலே கவனம் செலுத்துங்க" என்றார்.

இளம்பாரதி

எனக்கு ஒரே வியப்பு. "நா.பா.! என்ன ஆச்சரியம் பாருங்க. இதே வார்த்தையைப் போன வாரம் **த.நா. குமாரசாமி**யும் குமரி மலர் ஆபீசிலே சொன்னார். மொழிபெயர்ப்பு நடை நல்லா அமைஞ்சிருக்கிறதனாலே தொடர்ந்து ஈடுபடச் சொன்னார். ஆசீர்வாதம் பண்ணினது போலச் சொன்ன அதே வார்த்தைகளை நீங்களும் சொல்றீங்க" என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னேன். என் எழுத்தைப் பார்த்தசாரதி வரையறுத்துச் சொன்னது எனக்கு மிக்க மகிழ்ச்சியைக் கொடுத்தது.

இந்தக் கட்டுரையின் தலைப்பை இப்போது ஒரு தெலுங்கு வாசகரைப் போலப் படித்துப் பாருங்கள். நா என்றால் தெலுங்கில் 'என்னுடைய' என்று பொருள்படும். பார்த்தசாரதியின் முன்னெழுத்தை ஆங்கிலத்தில் உச்சரித்துப் பாருங்கள். அந்த 'என்' என்பது தமிழில் 'என்னுடைய' என்பதைக் குறிக்கிறது. **நா பார்த்தசாரதி என் பார்த்தசாரதிதானே! ஒப்புக்கொள்கிறீர்களா?**

பின்னர் மலையாளம், கன்னடம், ஹிந்தி மொழிகளைக் கற்றுக்கொள்ள நேர்ந்தபோதும் கூட அந்த இருவருடைய உற்சாக மொழிகள் என்னை முன் நோக்கி நடத்தியிருக்கின்றன. ●